தானுன காவியந்தான் சத்தகாண்டம் தயவுட்னே யேழுலட்சக் கிரந்தந்தன்னை, வேனுன நூல்பார்த்து வுளவுகண்டு விருப்பமுடன் பாடிவைத்தேன் ஏழுகாண்டம், மானுன மறைப்பு முதலில்லாமற்ருன் மாற்கமுடன் மனிதர்பேரில் பட்சம்வைத்து, கோனுன குருவருளால் காலாங்கிதம்மைக் குறிப்புடனே சரணமிட்டுப் பாடினேனே. 996

பாடினேன் நாலுயுகவதிசயங்கள்யாவும் பார்வைக்கு யெளிமைதனில் காண்பதற்கு, நீடியதோர் கருவெல்லாம் காணவென்று நேர்மையுடன் சீனபதியானுஞ் சென்று, கூடியதோர் விளையாட்டுயெல்லாம் பார்த்துக்கூறினேன் வெள்ளையென்ற மாந்தருக்கு, தேடியேயலையாமற் பொருள்களெல்லாம் திரவியங்கள் கிட்டுதற்கு மொழிந் திட்டேனே. 997

மொழிந்திட்டேன் யேழாயிரக் கோர்வைனூலில் முறைப்படியே யாம்சொன்ன வதீதமாற்கம், பழிந்திட்ட சித்தர்களும் சொல்லவில்லை பாரினிலே சொன்னுலுங் காணமாட்டார், வழிந்திட்ட சூத்திரங்கள் கைமறைப்பு வளமுடனே பாடிவைத்தேன் மாந்தறகாக, குறிந்திட்ட சூட்சாதி சூட்சமாற்கம் குறையாமல் பாடிவைத்தேன் பண்பதாமே. 998

பண்பான யேழாயிரக் காவியந்தான் பாரினிலே சித்தர்முனி ரிஷிகள்தாகும், நண்பாக மெய்ச்சியல்லோ வதிதஞ்சொன்னுர் நாதாக்கள் கைமறைப்பு நடுவீதியாச்சு திண்பான னூலதனை குகைக்குள்வைத்து சிறப்புடனே பூசையது மிகவுஞ்செய்தார், கண்பான பெருனூலேழாயிரந்தான் கனமுடனே சித்தரெல்லாம் விரும்பிட்டாரே. 999

விரும்பவே காண்டமது யேழுஞ்சொன்னேன் வெளியாகக் கருவெல்லாம் திரந்துபோட்டேன், துரும்புமுதலொளிக்கவில்லை சீனத்தாற்கு துப்புரவா யுரைத்துவிட்டேன் பட்சம்வைத்து கரும்புபோலேழாயிரக் காவியந்தான் கருத்துடனே பாடிவிட்டேன் மாந்தற்கப்பா, அரும்பொன் மனிதனைப்போல் விரண்டாங்கண்டம் அப்பனே முத்துமது முற்றதாமே. 1000

போகர் சத்தகாண்டம்-யேழாயிரத்தில்

**2-வது காண்டம் முற்றுப்பெற்றது.**

---

உ

கடவுள் துணை

மஹாமகத்துவம் பொருந்திய

## போக முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-7000

## மூன்ருவது காண்டம்

அண்டபராபரமான முதலேகாப்பு
அடியேனுங்காலாங்கி நாதர்பதங்காப்பு
புகன்றுநின்றகாலாங்கி குருபதமேகாப்பு
புகழானவல்லவமுனி சித்தர்பதங்காப்பு
தகன்றபெரியோர்ஞானி தாள்பதமேகாப்பு
சதாசிவத்தின்சுடரொளியே தனிப்பதமேகாப்பு
நிகன்றசத்சகரண்டமது யேழாயிரந்தான்
நிகழ்த்திேனன்மூன்ருவது காண்டமிதுதானே 1

தானுனகாண்டமிது மூன்ருங்காண்டம் சதுர்யுகத்து வதிசயங்கள் சாற்றலாகும், கோனுனயென்னையர்காலாங்கி நாதர் கூறினுர்திரேதாயுகத் தினதிசயத்தை வானுன காலாங்கிநாதருக்கு வயதல்லோவைந்துரண்டு பத்து மாச்சு, தேனுனயென்னையர் குருவாமையர் திரேதாவினதிசயத்தைச் செப்பினுரே. 2

செப்பினுர்காலாங்கி குருவாமையர் சிறந்தொரு குளிகையது பூண்டுகொண்டு, ஒப்பமுடன்கடலேழும் சுத்திவந்து ஓங்குபெறகைலங் கிரிகாணவென்று, மெப்புடனேகைலங் கிரியாதிபீடம் மேன்மையுடனடி வாரத்தண்டைபக்கம், கோடான கொப்பெனவேகுளிகைகொண்டு யிறங்கினுராம் கோடிமுனி ரிஷிகண்டாரே. 3

